**கவனிக்க.-** *26.07.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1822 - 2013 අගෝස්තු මස 02 වැනි සිකුරාදා - 2013.08.02

*1822 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1054 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1062 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1064 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1048 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் 2013, யூன் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) அல்ஹசன் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) முதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, யூலை மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, ஓகத்து மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஓகத்து மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## கண்டி கடவத்சத்தர கங்க வட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2014

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் வருடத்திற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக கள்ளுத் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2014 ஆம் வருடத்தில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2013.08.22 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,*

(அ) கேள்வி வைப்புப் பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும்,
(ஆ) கேள்விக்காரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப் பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன் வைக்கும் கேள்விக்காரர்களுக்கு மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக் கொத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விக்காரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடும் தொகையை எண்ணில் மாத்திரமன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.
(ii) நிரப்பிய கேள்விப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையெழுத்தொப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.
(iv) பூரணமற்ற கேள்விப்பத்திரங்களும் உரிய காலத்திற்கு பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட -

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,
(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்,

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு அந்த கடித உறையின் இடதுபக்க மேல் முனையில் ''தவறணையின் இலக்கமும் பெயரும்'' குறித்து கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிடின் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விக்காரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு மேற்படி மதுவகை தவறணைகள் பற்றிய நிபந்தனைத் தொகுதியில் கையொப்பம் இடுதல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப்பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்வியை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. கள்ளுத் தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க் கணக்கில் கள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையில் பாதுகாப்பு கருதி இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுப்பதற்குவேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக் கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய தவறணைகளை மீண்டும் 2013.10.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டெண்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

டி. எம். என். ஜீ. ஜீ. ரீ. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கண்டி கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2013.07.09.

**அட்டவணை**

**கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோறளையில் அனுமதியளிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல் - 2014**

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டெண்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 வட்டபுலுவ | கண்டி மாவட்ட வட்டார இல. 2 இல் இல. 20, மாயாவ மற்றும் இல. 7 மாபனா வத்துர தேர்தல் பிரிவுகள் | கட்டுகஸ்தொட்டை வீதியில் அந்த வீதியும் திருகோணமலை வீதி சந்தியில் கட்டுகஸ்தொட்டை வீதியும் வட்டாரந்தென்ன சந்திக்கும் இடையிலான பாதை கண்டி மாநகரில் இல. 20 - மாயாவ மற்றும் இல. 7 - மாபனாவதுர தேர்தல் பிரிவில் அமைந்துள்ள பிரதேசம் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2013.08.22 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

**கள்ளுத்தவறணை குத்தகை கேள்விகளுக்கான வைப்புப்பணம் - 2014**

| | | | |
|---|---|---|---|
| இல. 01 | வட்டபுலுவ | கள்ளுத் தவறணைக்கான குத்தகை | ரூபா 5,000 |

8-38/1

### நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2014

2014, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2014, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் கள்ளுத் தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய 2013, செத்தெம்பர் 04 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுக் குத்தகை வாங்க முன்வருபவர் சகல பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழுடன் காகித உறையிலிட்டு முத்திரை குத்தி இடப்பக்க மேல் மூலையில் தான் விலை கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப்பிராந்திய செயலகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழிவகுக்கலாம்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும்போது உண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். இப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2013, செத்தெம்பர் 04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப் பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் பொறுப்பு நாரம்மல பிரதேச செயலகத்தை சார்ந்ததாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்திகதி பி. ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாக செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2014 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2014 ஆம் வருடத்திற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. 2013.09.04 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாதவிடத்து 2013.10.31 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். ஏ. ஆர். சுதர்ஷனீ,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2013.07.10.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடவேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|
| 01 | நாரம்மல | 2013.09.04 மு. ப. 10.30 | ரூபா 1,000 | மு. ப. 11.00<br>பி.ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

8-44

**இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை இல. 01 - கள்ளுத்தவறணை ஏலவிற்பனை - 2014**

2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலஎல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

1. 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின் படியும்.

2. மதுவரிச்சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

   எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் ''பிரதேச செயலகம் - பலாங்கொடை'' எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று 1,500 ரூபாவினை செலுத்தி ''பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை'' எனக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணபத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையின் எல்லா பிரதேச செயலகங்களிலும் அல்லது கொழும்பு மதுவரி திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலை மனு உரையையொட்டி (சீல் வைத்து) இடப்பக்க மேல் மூலையில் ''பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு'' என்று தெளிவாக குறிப்பிட்டு விலை மனு திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனு பெட்டியில் அல்லது ''பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலை மனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலை மனு கோரமுடியாத அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனு கோரமுடியாது.

6. விலை மனுக்காரரால் குறிப்பிடப்பட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலை மனுக்களிலும் கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலை மனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலை மனுக்கோரலில் வெற்றிபெற்ற மனுக்காரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத் தவறணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2013.09.10 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும். விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனு பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலை மனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2013.09.10 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விலை மனு நடைபெறாவிட்டால் அது மீண்டும் 2013.11.06 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலைமனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

11. 2013 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூறமுடியாது. திறமையான விண்ணப்பக்காரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

சம்பிக நிரோஷ் தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை பிரதேச செயலகம்.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2013.07.11.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும் |
|---|---|---|---|---|
| இல. 01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | மு. ப. 11.00 மணி முதல்- பி. ப. 2.00 மணி வரை பின் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2013.09.10 மு. ப. 10.30 |

8-48

---

## மொணறாகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவில் இல. 1-பல்லே வராதொல கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை - 2014

மேற்குறிப்பிட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கள்ளுத் தவறணையை 2014, சனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 2014, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்வதற்காக பிரத்தியேக உரிமையை வழங்குவதற்கு 1982, ஒகத்து மாதம் 30 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், நடைமுறையிலுள்ள பொதுவிதிமுறைகளுக்கு அமைவாகவும், கீழ்க்குறிப்பிட்ட விதிகளுக்கு அமைவாகவும் 2013, ஒகத்து மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை கேள்விப்பத்திரங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. விண்ணப்பதாரர்கள் நாட்டில் எந்த பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரித்து கீழ்க்குறிப்பிட்ட நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தி பெற்றதற்கான பற்றுச்சீட்டுடன் இணைத்து கடித உறையின் இடதுபக்க மூலையில் மேற்படி கேள்விப்பத்திரம் வழங்கும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாக எழுதி இப்பிரதேச செயலகத்தில் வைத்திருக்கும் கேள்விப்பெட்டியில் அல்லது படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரக்காரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்களில் ஏற்பட்டிருக்கும் அனைத்து திருத்தங்களுக்கும் கேள்விப்பத்திரதாரர்கள் தமது கையொப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் விற்கப்படும் தினமான 2013, ஒகத்து மாதம் 28 ஆந் திகதி கேள்விப்பத்திரதாரர்கள் சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரங்கள் வழங்குவது 2013, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.30 மணியுடன் முடிவடையும். எந்தவொரு விடயமும் குறிப்பிடப்படாத கேள்விப்பத்திரங்களை அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்கு உண்டு. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர்கள் 'எவர்' என அறிந்தவுடன் அன்றைய தினம் மு. ப. 12.00 மணிக்கு முன்பாக அக்கேள்விப்பத்திரதாரர்கள் படல்கும்புர பிரதேச செயலாளரின் பெயருக்கு இரண்டு மாத வாடகைக்கு குறைவானதாக கணிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். அத்தோடு 'குத்தகை நிபந்தனையில்' கையொப்பம் இடல் வேண்டும். மேலதிக விபரங்கள் படல்கும்புர பிரதேச செயலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

5. 2013, ஒகத்து மாதம் 30 ஆந் திகதி கேள்விப்பத்திரங்கள் விற்க முடியாவிடின் 2013, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி மீண்டும் விற்கப்படும்.

கசுன் எச். கே. வெல்லஹேவா,
பிரதேச செயலாளர்,
படல்கும்புர.

பிரதேச செயலகம்,
படல்கும்புர,
2013.07.15.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | பிரிவு | தவறணை அமைந்த கிராமம் | திறக்கும் நேரமும் மூடும் நேரமும் | வைப்புத் தொகை | கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவு | பல்லேவராதொல கமேவெல | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணிவரை பி. ப. 4.00 மணி முதல் பி. ப. 8.00 மணிவரை | ரூ. 500 | 2013, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

8-91

---

## கட்டானை பிரதேச செயலாளர் பிரிவின் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2014

கீழ் தரப்பட்டிருக்கும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் 2014, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்கும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விதிகளுக்கமைவாகவும் நடைமுறையிலுள்ள பொது விதிகளுக்கமைவாகவும் இங்கு கீழே குறிப்பிட்டுள்ள விதிகளுக்கமைவாகவும் கேள்விப்பத்திரங்கள் 2013.09.26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரக்காரரினால் ஏதேனும் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் முறையாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை இங்கு கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தை செலுத்தியதற்காக பெறப்பட்ட பிரதேச அலுவலக பற்றுச்சீட்டுடன் கள்ளு விற்பனை நிபந்தனைகளுக்கமைவாகப் பெறப்பட்ட பெறுமதிச் சான்றுப்பத்திரத்துடன் பொறிக்கப்பட்டதும் இடது பக்க மூலையில் இங்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கேள்விப்பத்திரம் வழங்கப்படும் தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டதுமான கடித உறையில் இட்டு மேற்படி கேள்விப்பத்திரங்களை இப்பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திர பெட்டியில் போடவோ அல்லது கட்டான பிரதேச செயலாளருக்கு விலாசமிட்டு பதிவுத் தபால் மூலம் இங்கு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

கேள்விப்பத்திரத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது ஒப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2013.09.26 ஆந் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் கட்டான பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையோ எவ்வித காரணங்களையும் காட்டாது நிராகரிக்கும் உரிமை பிரதேச செயலாளருக்குண்டு.

உரிய திகதியில் விற்பனை செய்ய இயலாத கள்ளுத் தவறணைகள் 2013.11.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்பனை செய்யப்படும். அன்றைய தினத்தில் கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தல்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் எவருடையது என்பதை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக குத்தகையின் கேள்விப்பத்திரதாரர்கள் இரண்டு மாத வாடகைக்குக் குறையாது தீர்மானிக்கப்படும் தொகையை பிணைப்பணமாக கட்டானை பிரதேச செயலாளருக்குச் செலுத்தி குத்தகை விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கையொப்பமிடல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவையானோர் அவற்றினை கட்டான பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஜீ. எச். எச். ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டானை.

பிரதேச செயலகம்,
கட்டானை,
தெமங்ஹந்திய.
2013.07.17.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | தவறணை அமைந்துள்ள உள்ளூராட்சிப் பிரதேசம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | கேள்வி வைப்பு ரூபா | கேள்விப்பத்திரம் பொறுப்பேற்கும் இறுதித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | முக்கலன்கமுவை இல. 13 | கட்டானை | முக்கலன்கமுவை கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2013.09.26 மு.ப. 10.30 |
| 2. | கட்டுநாயக்க இல. 14 | கட்டானை | கட்டுநாயக்க கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 4,000 | 2013.09.26 மு.ப. 10.30 |
| 3. | ஏத்கால இல. 13 | கட்டானை | ஏத்கால கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 500 | 2013.09.26 மு.ப. 10.30 |
| 4. | கிழக்கு கட்டான இல. 24 | கட்டானை | கி. கட்டான கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2013.09.26 மு.ப. 10.30 |
| 5. | தெமன்ஹந்திய இல. 27 | கட்டானை | தெமன்ஹந்திய கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 2,000 | 2013.09.26 மு.ப. 10.30 |
| 6. | பம்புக்குளி இல. 26 | கட்டானை | பம்புக்குளி கிராமத்தில் மட்டும் | மு.ப.11.00 பி.ப.5.00 | பி.ப. 2.00 பி.ப. 8.00 | 1,000 | 2013.09.26 மு.ப. 10.30 |

8-186

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*பெயர்* : டீ ஜீ வேக்ஸ் குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 91933
*திகதி* : 2013, ஏப்பிறல் 5
*முகவரி* : மே/பா., கன்லத்ஸ், மெஸநைன் ப்ளோர், கலதாரி ஹொட்டெல், 64, லோட்டஸ் றோட், கொழும்பு 01

கன்லத்ஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

கலதாரி ஹொட்டெல்,
இல. 64, லோட்டஸ் றோட்,
கொழும்பு 01.

8-01/1

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*பெயர்* : ஆஸ்க் இன்டர்நஷனல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92682
*திகதி* : 2013, மே 28
*முகவரி* : இல. 34சீ, கவுன்சில் வீதி, தெஹிவளை

கன்லத்ஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

கலதாரி ஹொட்டெல்,
இல. 64, லோட்டஸ் றோட்,
கொழும்பு 01.

8-01/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்ட கம்பனியின் கூட்டிணைப்பு பற்றி அறிவிக்கப் படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : றொப் புறொபர்ட்டி குரூப் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 65438
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 16, டெம்பிள் வீதி, கொழும்பு 03
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 08.09.2008

லாரா சர்மந்தி தி சொய்சா, நடாலி மரியா, ஜயசூரிய,
பணிப்பாளர்.

8-01/4

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*பெயர்* : புளட்ஸ் ரிசோர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92681
*திகதி* : 2013, மே 29
*முகவரி* : வேளாங்கன்னி மாவத்தை, சிந்தாத்ரிய, வைக்கால்

கன்லத்ஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

கலதாரி ஹொட்டெல்,
இல. 64, லோட்டஸ் றோட்,
கொழும்பு 01.

8-01/3

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*பெயர்* : அமூரா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92816
*திகதி* : 2013, யூன் 3
*முகவரி* : மே/பா., கன்லத்ஸ், மெஸனைன் ப்ளோர், கலதாரி ஹொட்டெல், 64, லோட்டஸ் றோட், கொழும்பு 01

கன்லத்ஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

கலதாரி ஹொட்டெல்,
இல. 64, லோட்டஸ் றோட்,
கொழும்பு 01.

8-01/5

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*பெயர்* : சென். அந்தனிஸ் பொலிமர்டெக் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92360
*திகதி* : 2013, மே 15
*முகவரி* : இல. 752/1, கலாநிதி டனிஸ்ரர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 9

கன்லத்ஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

கலதாரி ஹொட்டெல்,
இல. 64, லோட்டஸ் றோட்,
கொழும்பு 01.

8-01/6

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*பெயர்* : மரியா யுனைட்டெட் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 92725
*திகதி* : 2013, மே 27
*முகவரி* : இல. 1134, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், எச்சலன் சதுக்கம், கொழும்பு 01

கன்லத்ஸ் செக்ரடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

கலதாரி ஹொட்டெல்,
இல. 64, லோட்டஸ் றோட்,
கொழும்பு 01.

8-01/7

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பிசினெஸ் அன்ட் இன்டஸ்ட்ரி டிவலொப்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 92823
*பதிவு முகவரி* : இல. 49/14, 1/1 பைவ் வீதி, கொழும்பு 05

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 5958).

8-21

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : பிரைய்ட் மவுன்டன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 93360
*பதிவு முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 02, கொழும்பு 03

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 5958).

*8-20*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : மரீனா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 88192
*பதிவு முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 02, கொழும்பு 03

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
(பீவீ 5958).

*8-26*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : விஷன் புரொபர்ட்டி டு (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இல.* : பீவீ 80919
*பதிவுத் திகதி* : 26.08.2011
*பதிவு முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 03

செக்ரடரீஸ் (பீவீரீ) எல்ரீடீ
பீவீ 5958.

*8-23*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : வரையறுக்கப்பட்ட லன்சியாவத்த (தனியார்) கம்பனி
*கம்பனியின் இல.* : பீவீ 60023
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 03
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2007, மே 18

செக்ரடேரியஸ் (பீவீரீ) எல்ரீடீ,
என்(பீவீஎஸ்) 27002.

*8-24*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் கீழ்வருமாறு மாற்றப் பட்டுள்ளதென அறிவிக்கின்றோம் :-*

*கம்பனியின் பெயர்* : விஷன் புரப்பட்டி டு (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இல.* : பீவீ 80919
*பதிவு முகவரி* : இல. 11, பொலிஸ் பார்க் அவெனியு, கொழும்பு 05
*கம்பனியின் புதிய பெயர்* : றொக்வுட் எஸ்டேட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

செக்ரடேரியஸ் (பீவீரீ) எல்ரீடீ,
பீவீ5958.

*8-27*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கானு மானு (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இல.* : பீவீ 92987
*பதிவு முகவரி* : இல. 09, டீ. ஜே. விஜேசிரிவர்தன மாவத்தை, கல்கிசை

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
பீவீ 5958.

*8-25*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வரையறுக்கப்பட்ட தல்பெ முகுது வெரல (தனியார்) கம்பனி
*பதிவு இல.* : பீவீ 60022
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 03
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2007, மே 18

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
என்(பீவீஎஸ்) 27002,
கம்பனி செயலாளர்கள்.

8-22

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கந்த உட கெதர (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 63267
*பதிவு முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 03

செக்ரடேரியஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பீவீ 5958.

8-19

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : வரையறுக்கப்பட்ட கொரக்கடைல் ரொக் (தனியார்) கம்பனி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 60028
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 3
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2007, மே 21

செக்ரடேரியஸ் (பீவீரீ) எல்ரீடீ,
என்(பீவீஎஸ்) 27002,
கம்பனி செயலாளர்கள்.

8-18

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : வரையறுக்கப்பட்ட கிம்புலாகல (தனியார்) கம்பனி
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 60029
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 40, கோல்பேஸ் கோட் 2, கொழும்பு 3
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2007, மே 21

செக்ரடேரியஸ் (பீவீரீ) எல்ரீடீ
என்(பீவீஎஸ்) 27002,
கம்பனி செயலாளர்கள்.

8-17

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எயார் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 90589
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.01.18
*பதிவு முகவரி* : இல. 14/2/சீ, கல்பொத்த வீதி, அத்துருகிரிய

கம்பனி செயலாளர்கள்.

8-86/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : லகின்ரோ (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 92043
*திகதி* : 2013.04.10
*முகவரி* : இல. 212/12, வோட் இடம், கொழும்பு 07

கம்பனி செயலாளர்கள்.

8-86/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : சில் ஐலண்ட் வில்லாஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 92558
கூட்டிணைப்புத் திகதி : 21.05.2013
பதிவு முகவரி : சமகி மாவத்தை, கல்துடுவ, கோணகலபுர

லீகல் அன்ட் கோர்ப்பரேட் கன்சல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 156, 1/8, ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.

8-59

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

வத்தளை, எண்டேரமுல்ல, 69/3ஜீ, சில்வடேல் செனவிரத்ன மாவத்தையில் வசிக்கும் சித்தி சஹீதா மிஸ்கீன் (தே. அ. அ. 746452497 V) ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவிப்பது யாதெனில், ஓமான், மஸ்கட் நகரில் அமைந்துள்ள இலங்கைத் தூதுவராலய துணைத் தூதுவரும் சமாதான நீதவானுமாகிய ஏ. சீ. குறுப்பு முன்னிலையில் 10, யூன் 2012 ஆந் திகதியிடப்பட்டு நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவத்தையும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு அமரதுங்க ஆராச்சிகே நிடுக் வாசனா பெரேரா முன்னிலையில் 19, ஓகத்து 2011 ஆந் திகதிய 318 ஆம் இலக்க அற்றோணித் தத்துவம் மூலம் இல. 69/3ஜீ, சில்வடேல் செனவிரத்ன மாவத்தையில் வசிக்கும் சலீம் மிஸ்கீன் என்பவரை நான் எனது அற்றோணித் தத்துவக்காரராக நியமித்தேன். இவ் அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச்செய்யப்பட்டு சட்டப்படி இனிமேல் இவை வலிதற்றதாகிறது என இத்தால் அறிவிக்கிறேன்.

சித்தி சஹீதா மிஸ்கீன்.

8-57

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பதுளை, அலுத்வெலகம, சப்புகஹபத்தன, 08/23 ஆம் இலக்க இடத்தை வதிவிடமாகக் கொண்ட திசாநாயக்க முதியன்சேலாகே (தே. அ. இல. 776763390V) ஆகிய என்னால் சட்டத்தரணியும் பிரசித்திபெற்ற நொத்தாரிசுமான திரு. அபேரத்னவினால் அற்றோணி அனுமதிப் பத்திர அட்டவணையில் 6 ஆம் பிரிவில் 148 ஆம் பக்கத்தில் 337 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு உறுதிசெய்யப்பட்ட 37 ஆம் இலக்க அற்றோணி அனுமதியாளராக தெரிவுசெய்யப்பட்ட பதுளை, அலுத்வெலகம, 5 ஆம் இலக்கத்தை வதிவிடமாகக் கொண்ட திசாநாயக்க ஆதியன்சேலாகே திசாநாயக்க (தே. அ. இல. 592894963V) என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி அனுமதிப்பத்திரத்தை இன்று முதல் இரத்துச்செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

டி. எம். ஜயமெனிக்கே.

8-56

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் 2013.06.12 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டுள்ள தென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனி பெயர் : எஸ்சென்சர் சிஸ்ரெம்ஸ் லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீபி 5122
பதிவு முகவரி : இல. 52, சேர். மார்க்கஸ் பர்ணாந்து மாவத்தை, கொழும்பு 7

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வரையறுக்கப்பட்ட கோர்ப்பரேட்
சேவைகள் நிறுவனம்,
கம்பனி செயலாளரகள்.

8-55

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 05.07.2013 ஆந் திகதி முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிரேட் பிளேஸ் ரிசேர்ச் அன்ட் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 93239
பதிவு முகவரி : இல. 4, 28 ஆம் ஒழுங்கை, ஃப்ளவர் வீதி ஊடாக, கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

8-54

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 20, பெர்னாண்டோ கார்டன்ஸ், தெஹிவளையைச் சேர்ந்த நாகலிங்கம் செல்வராஜா மற்றும் சியாமளா செல்வராஜா/துரைராஜா ஆகிய நாங்கள், இல. 14-3/2, ஹார்மர்ஸ் இடம், வெள்ளவத்தை,

கொழும்பு 6 ஐச் சேர்ந்த செல்லதுரை புஷ்பதாஸ் என்பவருக்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நாகினி யசோதாதேவி குணசீலன் முன்னிலையில் நிறைவேற்றப்பட்ட இல. 2903 கொண்ட 18.07.2010 ஆந் திகதியிடப்பட்ட கொழும்பு பதிவாளர் நாயக திணைக்களத்தில் 03.08.2010 ஆந் திகதி அற்றோணி தத்துவப் பதிவேட்டுப் புத்தக இல. 5704, வொலியும் 35, போலியோ 46 இல் பதியப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இத்தால் இரத்துச் செய்கிறோம் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் எங்கள் சார்பில் செய்யப்படும் எந்த செயல்களுக்கும் நாங்கள் பொறுப்பெடுக்க மாட்டோம் என்றும் அத்தகைய செயல்கள் எதனையும் நாங்கள் ஏற்றங்கீகரிக்க மாட்டோம் என்றும் இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகிறோம்.

நாகலிங்கம் செல்வராஜா மற்றும்
சியாமளா செல்வராஜா கன்னிப்பெயர் துரைராஜா.

8-95

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட மூலதனத்தை குறைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கிணங்க, (பீவீ 8125) ஜெனரல் சேல்ஸ் கொ. லிமிட்டெட், சுவிடிஸ் ட்றேடிங் கொ. (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனங்களிடமிருந்து கிரீன் சொய்ல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் கொள்வனவு செய்த கீழ்வரும் பங்குகள் செல்லுபடியற்றதாக்கப்படுவதுடன் கம்பனியின் குறித்துரைக்கப்பட்ட மூலதனம் குறைக்கப்படுகின்றது என்பதனை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன் :-

| பங்காளர் | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா ச. |
|---|---|---|
| 1. ஜெனரல் சேல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | 26375 | 263,750.00 |
| 2. சுவிடிஷ் ட்ரேடிங் கொ. (பிறைவேட்) லிமிட்டெட் | 20000 | 200,000.00 |
| | 46375 | 463,750.00 |

| குறித்துரைத்த மூலதனக் குறைப்பு | ரூபா ச. |
|---|---|
| குறித்துரைத்த மூலதனம் | 149,784,640.00 |
| கழி | |
| செல்லுபடியற்ற பங்குப் பெறுமதி | 463,750.00 |
| குறைக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட மூலதனம் | 149,320,890.00 |

சீ. சேனநாயக்க,
பணிப்பாளர்.

இல. 286/ஏ, 19 ஆவது ஒழுங்கை,
காலி வீதி,
கொழும்பு 03,
13.05.2013.

8-96

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு பகிரங்கமாக அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி : 06.10.2010
கம்பனியின் பெயர் : பயோமெடிக்ஸ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 74725
பதிவுசெய்த முகவரி : இல. 414, சியம்பலாபே வடக்கு, சியம்பலாபே

8-97/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : வாசனாகம பிளான்டேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இலக்கம் : பீவீ 93212
கூட்டிணைப்புத் திகதி : 2013.07.09
பதிவு முகவரி : இல. 45பி, அம்பத்தலை, முல்லேரியாவ, புதிய நகரம்

கம்பனி செயலாளர்.

8-97/2

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஜகத் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட திகதி : 24.02.2012
கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 84312
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : இல. 63, பஹல ரத்மீவேல, மேனிக்டிவேல, கண்டி

கம்பனி செயலாளர்.

8-129

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : எஸ். எல். சீ. அக்ரி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட திகதி : 27.10.2011

*கம்பனி பதிவிலக்கம் : பீவீ 80876*
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 63, பஹல ரத்மீவேல, மேனிக்டிவேல, கண்டி

கம்பனி செயலாளர்.

8-128

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* அப்பினிட்டி அக்ரோ பார்ம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட திகதி : 29.03.2011*
*கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 77946*
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 63, பஹல ரத்மீவேல, மேனிக்டிவேல, கண்டி

கம்பனி செயலாளர்.

8-130

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* அப்பினிட்டி ஏசியன் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட திகதி : 24.03.2011*
*கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 77945*
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி :* இல. 63, பஹல ரத்மீவேல, மேனிக்டிவேல, கண்டி

கம்பனி செயலாளர்.

8-131

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 20/ஏ, திஸ்ஸ வீதி, பீ. பி. அல்விஸ் பெரேரா மாவத்தை, கடுபெத்த, மொரட்டுவையில் வசிக்கும் அரச வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பயண உறுதிப்பத்திரம் இலக்கம் 452831291, ஷீலா சேமலதா பிரே ஆகிய நான், மத்திய மாகாண, கண்டியைச் சேர்ந்த பிரசித்திபெற்ற நொத்தாரிசு எம். கே. ஜயதிலக்க என்பவரால் உறுதிப்படுத்தப்பட்டு 2012.01.12 ஆந் திகதிய 671 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தின் மூலம் அற்றோணி தத்துவதாரரான கண்டி, நத்தரம்பொத, கலாபுரய, ரனமயுர மாவத்தை, இலக்கம் 42 எனும் இடத்தில் வசிக்கும் ரவீந்தர ரூப்பசேன குணவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் என்னால் இல்லாதொழிக்கப்படுகிறது எனவும் அவரால் இனிமேல் செய்யப்படும் ஏதேனும் செயலுக்கும் அல்லது செயற்பாட் டிற்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

ஷீலா சேமலதா பிரே.

8-31

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* டிரிபில் பே ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம் : பீவீ 90743*
*பதிவு முகவரி :* இல. 603/1, போகஹா சந்தி, நிதாஹெென, கொத்தட்டுவ
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 29.01.2013*

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

8-181

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

குளியாபிட்டிய, அஸ்ஸத்தும, ஸ்ரீ விக்கிரம எனும் விலாசத்தில் வசிக்கும் உடதெனி பதிருன்னெஹலாகே சுனேத்ரா பதிரன மற்றும் அதே விலாசத்தில் வசிக்கும் குன்டா மேன்பிரேட் குவினிக் ஆகிய எம்மால் மீகஹகொடுவ, குளியாபிட்டியவைச் சேர்ந்த நொத்தாரிசுவான எச். ஜீ. கெலும் தர்மகீர்த்தி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு குளியாபிட்டி, அஸ்ஸத்தும, ஸ்ரீ விக்கிரம வீதியில் வசிக்கும் திருமதி ரன்கெடிகே பத்மா உதேனி பதிரனவுக்கு வழங்கப்பட்ட 2008.08.22 ஆந் திகதிய 842 ஆம் இலக்க அற்றோணித் தத்துவப்பத்திரம் 2013.07.12 ஆந் திகதியில் இருந்து அமுலாகும் வகையில் செல்லுபடியற்றதாக்கி இரத்துச்செய்யப் பட்டது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

1. உடதெனி பதிருன்னெஹெலாகே சுனேத்ரா பதிரன,
2. குன்டா மேன்பிரேட் குவினிக்.

8-153

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ப்ரேவ் கார்ட் செக்கியூரிட்டி அன்ட் இன்வெஸ்டிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 92410
*கம்பனி பதிவு முகவரி* : ஜயவர்த்தனபுர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரிய, இலங்கை
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 08.05.2013

ஏ. ஜீ. சர்மா கம்பனி மற்றும் கணக்காளர்,
கம்பனி செயலாளர்கள்.

மெஸென்ஜெர் வீதி,
கொழும்பு 12.

8-152

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : என்செல் லங்கா டிவலொப்மன்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 93563
*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : கடவத யத்த, கடி வீதி, தொடகொட, அக்மீமன

கம்பனி செயலாளர்.

8-146

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனி பெயர்* : ஸ்டெல்லர் டைனமிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 93214
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2013, யூன் 25
*பதிவு முகவரி* : இல. 20/49பி, வீரகோன் கார்டன்ஸ், கண்டி

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

8-141

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைப்பு சம்பந்தமாக பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எக்ரோ பிளெக்ஸ் புரொடக்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 93457
*பதிவுசெய்த திகதி* : 09.05.2013
*பதிவுசெய்த அலுவலகம்* : இல. 354, காலி வீதி, அலுத்கம

கம்பனி பணிப்பாளர்கள்.

8-255

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள பத்தரமுல்ல, பெலவத்த, தியவன்ன தோட்ட வீதி, 574/12 ஆம் இலக்கத்தில் வசிப்பவரும் 630570719 V என்ற தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பவராகிய ஹேவாகம ஆராய்ச்சிகே விஜேவீர அல்லது ஹேவாகம அச்சிகே விஜேவீர ஆகிய நான், 2001.07.20 ஆந் திகதியிடப்பட்டதும், 53 ஆம் பக்கத்தில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பதிவேட்டின் 225 ஆம் தொகுதியில் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் 2001.07.20 ஆந் திகதிய 6236 ஆம் இலக்கத்தில் பதிவுசெய்யப்பட்டு மேற்குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு 8, லெஸ்லி ரணகல மாவத்தை, குவன் புர வீடமைப்புத் தொகுதியில் ஏ. எம். கியூ. ஈ/2/3 என்ற இலக்கத்தைச் சேர்ந்தவரான ஹேவாகம அச்சிகே விமலசேன என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லா தொழிக்கின்றேன் என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன். மேற்குறிப்பிட்டுள்ள அற்றோணித் தத்துவத்தின் மூலம் எனது சார்பாக ஹேவாகம அச்சிகே விமலசேன என்பவரால் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் இக்குறிப்பு பிரசுரமாகும் திகதியிலிருந்து நான் பொறுப்பேற்க மாட்டேன்.

ஹேவாகம ஆராய்ச்சிகே விஜேவீர
அல்லது ஹேவாகம அச்சிகே விஜேவீர.

8-202

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

களுத்துறை தெற்கு, இசுறு 1, 3 ஆம் ஒழுங்கை, இல. 274 இல் வசிக்கும் சுதுவே தேவகே விமலசிரி ஆகிய நான், களுத்துறை, நாகொடை, மத்துகமை வீதியில் இல. 221 இல் வசிக்கும் சுதுவா தேவகே ரூபிக்கா தமயந்தி (தே. அ. அ. இல. 635992794 V) என்பவருக்கு ரோம், இத்தாலி தூதுவரால் உறுதிப்படுத்தப்பட்டு 2007.09.15 ஆந் திகதி ரெஜிஸ்றார் திணைக்களத்தில் இல. 369, 37 ஆம் அதிகாரப்படி 2007.09.28 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டு

அற்றோனி அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்டது. மேற்படி அற்றோனி அதிகாரப்பத்திரம் இந்த அறிவிப்பு அரசாங்க வர்த்தமானி மற்றும் இலங்கை செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பின் வலுவிழக்கச் செய்யப்பட்டு நீக்கப்பட்டுள்ளதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன். அதன் பின்பு மேற்படி சுதுவா தேவகே ரூபிகா தமயந்தி மூலம் எனது பெயரில் எனக்காக செய்யப்படும் எந்தவித காரியங்களுக்கும் நான் பொறுப்புகூற மாட்டேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சுதுவே தேவகே விமலசிரி.

8-204

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப் பட்டுள்ளதென்ற அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : பிரைஹட் வீவ் லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீபி 5036
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
*கம்பனியின் புதிய பெயர்* : கோல்டன் விஸ்டஸ் லிமிட்டெட்

செல்வி கிறிஷாந்தி இம்மானுவல்,
கம்பனி செயலாளர்.

8-227/1

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் பின்வருமாறு மாற்றப் பட்டுள்ளதென்ற அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கிறீன் வீவ் ஹொரிஸன் லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீபி 5042
*பதிவு முகவரி* : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
*கம்பனியின் புதிய பெயர்* : டிஸ்டன்ட் ஹொரிஸன்ஸ் லிமிட்டெட்

செல்வி கிறிஷாந்தி இம்மானுவல்,
கம்பனி செயலாளர்.

8-227/2

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பிறநாட்டு குடிவகைத் தவறணைகளை குத்தகைக்கு விற்றல் - 2014

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகிரங்கப்படுத்தப்பட்ட (பிரசுரிக்கப்பட்ட) 1983 ஆம் வருடத்திற்கும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக பிறநாட்டு குடிவகைகள் தவறணைகள் குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும் அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2014 ஆம் வருடத்தில் பிறநாட்டு குடிவகைகள் சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளராகிய என்னால் 2013.08.23 ஆந் திகதி முற்பகல் 10.30 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். அத்துடன்,

(அ) கேள்வி வைப்பு பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்ட குறித்த கேள்விப்பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் ;

(ஆ) கேள்விதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனது சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் கேள்விப்பத்திரத்துடன் முன்வைத்தல் வேண்டும்.

கேள்விகளையும் சொத்துக்கள் பற்றிய சான்றிதழையும் முன்வைக்கும் கேள்விதாரர்களுக்கு மேற்படி பிறநாட்டு குடிவகை தவறணைகளை விற்றலுடன் தொடர்புடைய நிபந்தனைக் கொத்தில் அடங்கிய கட்டளைகளை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும் போது அங்கு குறிப்பிடும் தொகையை எண்ணில் மாத்திரமன்றி எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

(ii) நிரப்பிய கேள்வி விண்ணப்பப்பத்திரத்தில் சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விதாரரின் சுருக்க ஒப்பத்துடன் திகதியும் இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(iv) பூரணமற்ற கேள்விப்பத்திரங்களும் உரிய காலத்திற்கு பின்பு சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்வி விண்ணப்பப்பத்திரத்தை கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட–

(அ) பிரதேச செயலகப் பற்றுச்சீட்டுடனும்,
(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழுடனும்

இணைத்து கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அந்த கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தவறணையின் இலக்கமும் பெயரும்'' குறிப்பிடப்பட்டு கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிடின் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவதற்கு முன்பு கண்டி பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. குத்தகை தொடர்பாக கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் கண்டி பிரதேச செயலகத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. திருப்தியாக கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விதாரர், சிறப்புரிமைகளை வாங்கியவர் என பிரகடனப்படுத்தப்பட்ட பின் அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன்பு கண்டி பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக, கண்டி பிரதேச செயலகத்தில் வைப்பிலிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ''கொடுப்பனவுக்காக'' என குறிப்பிட்ட காசோலையொன்றினால் அல்லது இலங்கை வங்கியினாலோ, மக்கள் வங்கியினாலோ வழங்கப்பட்ட ''பாதுகாப்பான காசோலை'' என அழைக்கப்படும் காசோலையினாலோ அல்லது வங்கியொன்றினால் அவ்வங்கியின் பெயருக்கு வழங்கப்பட்ட காசோலையொன்றினாலோ செலுத்தப்படல் வேண்டும். தேவையான அளவு முத்திரைகளை ஒட்டி மதுவகை தவறணைகள் ஒப்பந்தப்பத்திர தொகுதியில் கையொப்பமிடல் வேண்டும்.

6. ஒப்பந்தப்படி உடன்படும் கேள்வி பணத்தொகையை தவணை முறையில் ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.

7. ஏதாவது ஒரு கேள்வியை பலபேர் சேர்ந்து முன்வைப்பதாயின் அந்த ஒவ்வொரு ஆளினதும் சொந்த முகவரியை வெவ்வேறாக தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

8. பிறநாட்டு குடிவகை தவறணைகளிலோ பிற அனுமதிப்பத்திரம் உடைய இடங்களிலோ விற்பனைக்காக மொத்தமாக பீப்பாய்க்கணக்கில் பிறநாட்டு குடிவகைகள் விநியோகிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

9. கண்டி எசல பெரஹரா நடைபெறும் வேளையில் பாதுகாப்பு கருதி இங்கு கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் 1 ஆம் இலக்க பிறநாட்டு குடிவகைகள் தவறணையை தற்காலிகமாக மூடுவதற்கு என்னால் கட்டளையொன்றை விடுப்பதற்குவேண்டி ஏற்பட்டால், அவ்வாறு தவறணையை மூடும் காலப்பகுதிக்கு குத்தகைக்கால வரையறையில் சலுகை ஏற்பாடு செய்யப்பட மாட்டாது.

10. மேற்படி கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் விற்பனை செய்யமுடியாதுபோன எஞ்சிய தவறணைகளை மீண்டும் 2013.10.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு விற்பனை செய்யப்படும். அன்றைய தினம் கேள்விப்பத்திரங்களை இந்த வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.

11. எனது முடிவே இந்த கேள்விகளை (டென்டர்) விற்பனை செய்வதற்கான இறுதி முடிவாகும்.

12. தவறணைகளை விற்பனை செய்வதற்குரிய ஒப்பந்த நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இந்த அலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ள முடியும்.

டி. எம். என். ஜீ. ஜீ. ரீ. கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
கண்டி கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2013.07.09.

**அட்டவணை**

***கண்டி மாவட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட பிறநாட்டு குடிவகை தவறணைகளின் பட்டியல்- 2014***

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணையை அமைக்கவேண்டிய பிரிவு | தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்விப் பத்திரங்களை (டென்டர்) ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|
| இல. 01 கொழும்பு வீதி | 1. கண்டி நகரத்தில் இல. 17 யட்டி நுவர மற்றும் இல. 18 கொட்டுகொடல்லை வீதி | கண்டி நகரத்தில் இல. 17 யட்டிநுவர மற்றும் இல. 18 கொட்டு கொடல்ல வாக்கெடுப்பு பிரிவுக்குள் கொழும்பு வீதி மற்றும் காசல் ஹில் வீதி சந்தியிலிருந்து கொழும்பு வீதி, வடுகொடபிட்டிய பாதையில் சந்திக்கு இடைப்பட்ட பகுதி கொழும்பு வீதி இரு மருங்கிலும் | மு. ப. 11.00 தொடக்கம் பி. ப. 2.00 மணிவரை மற்றும் பி. ப. 5.00 தொடக்கம் பி. ப. 8.00 மணி வரை | 2013.08.23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை |

***பிற நாட்டு குடிவகை தவறணைகள் குத்தகை கேள்விகளுக்கான இறுப்புப்பணம் - 2014***

இல. 01 பிறநாட்டு குடிவகை தவறணை குத்தகை - ரூபா 5,000.00

8-38/2

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0064 5000 4810 - பீ. வீ. ஜே. குமார மற்றும் ஏ. சீ. பீ. பண்டார

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2010.10.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.11.19 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.11.09 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினான்கு இலட்சத்து பதின்மூவாயிரத்து இருநூற்றெண்பத்துநான்கு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 14,13,284.12) 2010, ஒகத்து 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஐந்து இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்றைம்பத்தைந்து ரூபா எழுபத்துநான்கு சதம் (ரூ. 5,99,855.74) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்தொன்பது வீதம் (19%) மேலும் ஒரு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 1,83,500) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தொரு வீதம் (21%) மேலும் நான்கு இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து எழுநூற்றுப்பதினான்கு ரூபா நான்கு சதம் (ரூ. 4,96,714.04) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தைந்து வீதம் (25%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2013.08.30 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றோம்.

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், பரணகுரு கோரளே, மாவத்த பத்துவையின், கேகாலை பிரதேச சபை எல்லைகளுக்குள் கங்கொட கிராமத்தில் அமைந்த "தலகாஹாஹேன எனும் காஹாட்ட காஹாமுலஹேன எனும் லீமாகாஹாமுலஹேனவின் ஒரு பகுதி" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஏ.

உஸ்மான் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஓகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 1023 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கிற்கு : எலிஸ்கெஹேன எனும் தல்காஹா ஹேன ; கிழக்கிற்கு : மோலமுரேவத்த ; தெற்கிற்கு : இல. 3795 எனும் வரைபடத்தில் லொட் 4 மற்றும் பெரகல வரை நீளும் பாதை ; மற்றும் மேற்கிற்கு : இல. 3795 எனும் வரைபடத்தில் லொட் 2 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் முப்பத்திரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 32பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1023 எனும் வரைபடத்திற்கு அமைவாக கேகாலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஏ593/28 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

8-239/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0009 1000 5669 - என்த்தன் டிரேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர் சபையினால் 2013.01.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.03.01 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2013.02.18 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே முப்பத்தொரு இலட்சத்து ஐம்பத்துமூவாயிரத்து முன்னூற்றைம்பத்தைந்து ரூபா ஐம்பத்துநான்கு சதம் (ரூ. 5,31,53,355.54) 2012, நவெம்பர் 08 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை நான்கு கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து தொளாயிரத்துநாற்பத்திரண்டு ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 4,99,99,942.63) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2013.08.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மற்றும் நகரசபை எல்லைகளுக்குள், கொச்சிக்கடை, தெற்கு வோட் இல. 19, பழைய சோனகத்தெருவில், வரிமதிப்பீட்டு இல. 193, (ஒரு பகுதி) உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ். எச். பி. ஜோசம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, திசெம்பர் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 62/84 காணித்துண்டின் உப பிரிவாகவுள்ள மீள் அளவீடு செய்யப்பட்ட காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. சின்னத்தம்பி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1994, நவெம்பர் 7 ஆந் திகதியிடப்பட்ட இல. 4746 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணி யின் எல்லைகளாவன : வடக்கில் : புதிய சோனகத்தெரு வரிமதிப்பீட்டு இல. 216 ஐ ஏற்ற வளவு; கிழக்கிற்கு : இங்கமைந்த லொட் Y ; தெற்கிற்கு: பழைய சோனகத்தெரு; மற்றும் மேற்கிற்கு: பழைய சோனகத்தெரு வரிமதிப்பீட்டு இல. 189 ஐ ஏற்ற வளவு ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒன்பது தசம் ஐந்து ஆறு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.56பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 4746 எனும் வரைபடத்திற்கு அமைவாக கொழும்பு காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 1116/ 228 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

8-239/2

---

**செலான் வங்கி பீ.எல்.சீ – பட்டதாரிகள் தொழில் முயற்சிகளுக்கான கடன் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**சொத்துக்கள் ஏல விற்பனை**

("கடன்பட்டோர்" என்ற வகையில் பாதுக்கயைச் சேர்ந்த ரைஹமஹே டோனா சுசந்த மற்றும் திலகரட்ன ஆராச்சிகே சரத் புண்ணியசிறீ என்பவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிக்காக செலான் வங்கி பீ.எல்.சீ.க்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோரளை யிலுள்ள மெதபத்துவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட குருகலவில் அமைந்துள்ள கஹடஹகாவத்தைக்கு அருகில் உள்ள 'ஹலகிட்டியாவ' என்று அழைக்கப்படுகின்ற காணி, அனுமதிபெற்ற நில அளவையாளர் ஆர். கருணபால என்பவரால் தயாரிக்கப்பட்டு 12.01.1993 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 11341 இல் சகலதும் பிரிக்கப்பட்டு அடையாளமிடப்பட்ட மரங்கள், பெருந்

தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் மூன்று றூட் (0ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2013, ஓகத்து 27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

***காணியைச் சென்றடைகின்ற விதம்.***- ஹோமாகம நகரத்திலிருந்து ஹைலெவல் மார்க்கமாக இரத்தினபுரி நோக்கி சுமார் 3 1/2 கி. மீ. செல்கையில் ஹோமாகம சந்தியின் வலது புறமாகத் திரும்பி பாதுக்க வீதி மார்க்கமாக சுமார் 5 1/2 கி. மீ. சென்று வரும் லியன்வல சந்தியின் வலது புறமாகத் திரும்பி வரும் லியன்வல வீதி மார்க்கமாக 2.3 கி. மீ. சென்றால் குருஹல சந்தி அமைந்திருக்கும். அங்கிருந்து இடதுபுறமாக உள்ள பிட்டுவல வீதியால் தொடர்ந்து 300 மீற். சென்றால் குறிக்கப்பட்ட சொத்தை அடையலாம்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- 2009.12.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2009.11.23 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' பத்திரிகைகளையும் மற்றும் 22.12.2009 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***கட்டணம் செலுத்தும் முறை.***- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகாரசபைக்கு உள்ளூர் விற்பனை வரி 1% (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500 ; (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. இல் வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பி. எல். சீ., செலிங்கோ செலான் டவர், இல. 90, காலி வீதி, கொழும்பு 3'' என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொலைபேசி இல. : 2456458, 2456471.

துசித கருணாரத்ன (ச. நீ.),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. : 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ.
தொலைபேசி : 2572940 மற்றும் 011-3068185.

8-205

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**
**செலான் வங்கி பீஎல்சீ**
**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

*சாதாரண பங்குகள் பகிரங்க ஏல விற்பனை*

***தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, செலான் வங்கி பீஎல்சீ, ஹட்டன் நஷனல் ஆகிய நிதி நிறுவனங்களில் பின்வரும் முறையில் அடகுவைக்கப்பட்ட சன்றோ கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட், ஆனந்த பராக்கிரம அமரசிங்க, திமித்ரி சந்தன குணசேகர மற்றும் அஷ்ரப் ஓமர் ஆகியோருக்குச் சொந்தமான போருக பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் சாதாரண பங்குகள் மற்றும் அது தொடர்பான உரிமைகள் - போருவ பவர் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் உத்தரவுக்கமைய சாதாரண பங்குகளின் விபரங்கள் :-***

| பங்குதாரரின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குப் பத்திரங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| சன்றோ கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 01 | 02 | 01 |
| சன்றோ கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 4,799,999 | 06 | 4,799,999 |
| சன்றோ கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 6,500,000 | 10 | 6,500,000 |
| சன்றோ கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 1,260,000 | 11 | 1,260,000 |
| சன்றோ கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 3,800,000 | 13 | 3,800,000 |
| சன்றோ கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட் | 1,968,200 | 15 | 1,968,200 |
| | | | 18,328,200 |
| திரு. ஆனந்த பராக்கிரம அமரசிங்க | 01 | 05 | 01 |

| பங்குதாரரின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | பங்குப் பத்திரங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| திரு. ஆனந்த பராக்கிரம அமரசிங்க | 199,999 | 08 | 199,999 |
| | | | 200,000 |
| திரு. திமித்ரி சந்தன குணசேகர | 200,000 | 09 | 200,000 |
| | | | 200,000 |
| திரு. அஷ்ரப் ஓமர் | 1,771,800 | 14 | 1,771,800 |
| | | | 1,771,800 |
| | 20,500,000 | | 20,500,000 |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பங்கு உறுதிப்பத்திரங்கள், கொழும்பு காணிப்பதிவக எல்லைகளுக்கு உட்பட்ட, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் அமைந்துள்ள தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீயில் பாதுகாப்பின் பொருட்டு வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு என். டீ. பி. வங்கி பீஎல்சீ, இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்னுமிடத்தில் நடைபெறும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) மொத்த கொள்வனவுத் தொகை ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 29,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

**தீர்மானம் பற்றிய அறிவித்தல்களுக்கு தயவுசெய்து பின்வரும் விபரங்களைப் பார்க்கவும் :-**

*1. தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.- 2009, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதிய, 2010, மாச்சு மாதம் 26 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும், 2010, மாச்சு மாதம் 11 ஆந் திகதி வெளியான ''திவயின'', ''த ஐலண்ட்'' மற்றும் ''தினகரன்'' செய்திப் பத்திரிகைகளையும் தயவுசெய்து பார்வையிடவும்.*

*2. ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ.- 2010, சனவரி மாதம் 07 ஆந் திகதிய, 2010, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும், 2010, மாச்சு மாதம் 30 ஆந் திகதி ''திவயின'', ''த ஐலண்ட்'' பத்திரிகைகளிலும், 2010, மாச்சு 25 ஆந் திகதிய ''தினகரன்'' பத்திரிகையிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*3. செலான் வங்கி பீஎல்சீ.- 2010, மாச்சு மாதம் 05 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும், 2010, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெளியான ''டெயிலி மிரர்'', ''லங்கா தீப'', மற்றும் ''தினகரன்'' செய்திப் பத்திரிகைகளையும் தயவுசெய்து பார்வையிடவும்.*

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2448448 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் என்டீபி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

*''முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.''*

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
121 வருடகால சேவை அனுபவம்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

8-156

---

### கொமர்ஷியல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – மத்துகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷியல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி-*

**காணிகள் ஏல விற்பனை**

**முதலாவது அட்டவணை**

**(1) மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பஸ்பாகே கோரல பிரதேச சபை எல்லையில் கடியெண்லெண கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். எல். எம். செரிப் 05.08.1984 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2692/84 இல் காண்பிக்கப்பட்ட மசபில்ல எஸ்ட்டேட் காணியின் லொட் 1பி, இக்காணியில் உள்ள கட்டிடங்கள் எல்லாம் சேர்த்து**

**(விஸ்தீரணம் : இருபது ஏக்கர் (20ஏ. 0றூ. 0பே.))**

**இரண்டாவது அட்டவணை**

**(2) மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கம்பொல பதிவு எல்லையில் உடபுலத்கம பஸ்பாகே கோரலயில் கடியெண் லெண கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் பி. ஞானபிரகாசம் 29.10.1985 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1285 இல் காண்பிக்கப்பட்ட மசபில்ல எஸ்ட்டேட்**

**காணி, இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து**

**(விஸ்தீரணம் : இருபத்தியாறு ஏக்கர் (26ஏ. 0றூ. 0பே.))**

**மூன்றாவது அட்டவணை**

**(1) மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மாபத்து தெற்கு பஸ்துன் கோரல கிழக்கு கெவிட்டியாகல கிராமத்தில் அமைந்துள்ள பணரகொடயேண மற்றும் பலவில்தெணிய காணியின் நிலஅளவையாளர் ஏ. இலங்ககோன் 19.08.2007 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 226 இல் காண்பிக்கப்பட்ட லொட் ஏ மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து**

**(விஸ்தீரணம் : எட்டு ஏக்கர் (8ஏ. 0றூ. 0பே. ; ஹெக்டெயர் 3.2374))**

**(2) மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மாபத்து தெற்கு பஸ்துன் கோரல கிழக்கு கெவிட்டியாகெல கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் ஏ. இலங்ககோன் 19.08.2007 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 226 இல் காண்பிக்கப்பட்ட பணரகொடயேண மற்றும் பலவில்தெனிய காணியின் லொட் பி மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து**

**(விஸ்தீரணம் : ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தொன்று தசம் ஒரு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 31.1பே. ; ஹெக்டெயர் 0.6858))**

**(3) மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், மாபத்து தெற்கு பஸ்துன் கோரலயில் கெவிட்டியாகெல கிராமத்தில் அமைந்துள்ள பணரகொடயேண மற்றும் பலவில்தெனிய காணியின் நிலஅளவையாளர் ஏ. இலங்ககோன் 19.08.2007 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 226 இல் காண்பிக்கப்பட்ட லொட் டி மற்றும் இக்காணியில் உள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து**

**(விஸ்தீரணம் : ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே. ; ஹெக்டெயர் 0.1011))**

**நான்காவது அட்டவணை**

**(4) மொடல் நண்டா 7144ரீ சீரிஸ் டீ கலர் சோட்டர் விபரம் அத்துடன் பக்கட் இலவேட்டர், பியட் ஹொப்பர், த்ரூ கன்வேயர் மற்றும் ஸ்டேண்டர்ட் எக்சசரீஸ்.**

*(கடன் எடுத்த சம்ரோ டீ பெக்டரி என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் கியாண் நிரோசன் ஜயவர்தன மற்றும் சியான் நிரோசன் ஜயவர்தன மற்றும் தொன் உபசேன ரூபசிங்க மேற்படி ஆதனத்தை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

*1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணைகளின் காணிகள் 2013, ஓகத்து 23 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கும் (மசாபில்ல எஸ்ட்டேட் கண்டி மாவட்டம், கடியண்லேண கிராமத்தில் அமைந்துள்ளது.),*

*3 ஆவது அட்டவணை - 1, 2 ஆவது மற்றும் 3 ஆவது காணிகள் 2013, ஓகத்து 26 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கும்*

*4 ஆவது அட்டவணை - இயந்திரங்கள் 2013, ஓகத்து 26 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கும் (பலவில்தெணிய, கெவிடியாகல, களுதுறை) என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- *2010.07.02 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2010.11.22 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் வீரகேசரி" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2013.08.02 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் "லக்பிம", "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**காணிக்குச் செல்லும் விதம்.**- *(1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணைகள்).- நாவலப்பிட்டியில் இருந்து தலவாகெலே றோட்டில் 9.5 கிலோ மீட்டர் கடியண்லெண (கல்வெட்டு இல. 10/8) வரை சென்று வலதுபக்கம் உள்ள பர்காபல் றோட்டில் 3 கிலோ மீட்டர் சென்று வலதுபக்கம் திரும்பி வெஸ்ட் ஓல்ட் எஸ்ட்டேட் றோட்டில் 200 மீட்டர் சென்று மீண்டும் வலதுபக்கம் திரும்பி 2.30 கிலோ மீட்டர் சென்று காணியை அடைய முடியும்.*

**காணிக்குச் செல்லும் விதம்.**- *(3 ஆவது அட்டவணை 1, 2 ஆவது மற்றும் 3 ஆவது காணி).- மத்துகம-பெலவத்த றோட்டில் பொல்கம் பொல பஸார் வரை சென்று வலது பக்கம் திரும்பி உள்ள மண் றோட்டில் 250 மீட்டர் சென்ற பிறகு இக்காணி இடதுபக்கம் 200 மீட்டர் சென்ற பிறகு இந்த றோட்டில் அமைந்துள்ளது.*

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- *உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு விலையின் 10% ;*
*(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;*
*(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;*
*(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;*
*(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;*
*(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;*
*(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது மத்துகம கிளையில் செலுத்த வேண்டும்.*

*வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 38, களுத்துறை றோட், மத்துகம. தொலைபேசி இல. : 034-2249470-2 ; தொலைநகல் இல. : 034-2249473.*

எல். பி. சேனநாயக்க,
உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.

*8-228*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2013**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஓகத்து** | .. | வெள்ளி | 02.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.07.2013 |
| | | வியாழன் | 08.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.07.2013 |
| | | வெள்ளி | 16.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.08.2013 |
| | | வெள்ளி | 23.08.2013 | .. | நண்பகல் 12 | வியாழன் | 08.08.2013 |
| | | வெள்ளி | 30.08.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.08.2013 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 06.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.08.2013 |
| | | வெள்ளி | 13.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.08.2013 |
| | | வெள்ளி | 20.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.09.2013 |
| | | வெள்ளி | 27.09.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.09.2013 |
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2013 |
| | | வெள்ளி | 11.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2013 |
| | | வியாழன் | 17.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.10.2013 |
| | | வெள்ளி | 26.10.2013 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.10.2013 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.